[1987 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கருத்து தவறான கருத்து. காரணம் இடமே இல்லாமல் இல்லை. ஏற்கனவே டான்சிக்குச் சொந்தமான கட்டிடங்களில் பல்கலைக் கழகம் நடக்கிறது. பல பிரிவுகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. முன்கூட்டியே, முன் எச்சரிக்கையாக கட்டிடங்கள் கட்டுவது என்பது இயலாத காரியம். காரணம் பிளாக் கிராண்ட் பொறுத்தவரைக்கும் யு.ஜி.சி. தான் தருகிறது. யு.ஜி.சி.யின்படி பல்கலைக்கழகம் துவங்கிவிட்டு ஓராண்டு, ஈராண்டுக்காலம் அதனுடைய முனைப்புப் பணிகளைப் பார்த்தபிறகுதான் கட்டிடம் கட்ட பிளாக் கிராண்ட் தருகி றார்கள். யு.ஜி.சி. கொடுக்கிறதோ இல்லையோ மாநில அரசே தரவேண்டும் என்ற நோக்கோடுதான் இதற்கு நிதியையும் நாம் ஒதுக்கிவிட்டு இருக்கிறோம். தற்போது தடையாணை வாங்கி விட்ட காரணத்தினால் பணி நடக்காமல் இல்லை. டான்சி கட்டிடங்கள் பணி நடக்கிறது. டான்சி கட்டிடங்கள் போதிய அளவில்லை. ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதி இல்லை. அங்கு இருக்கின்ற ஒரே பிரச்சனை இதுதான். குடியிருப்புகள்தான் முக்கியத் தேவையாக இருக்கிறது. அதற்குத்தான் தற்போது நடவடிக்கை எடுக்கிறோம்.

தமிழ்நாட்டில் எல்லா பள்ளிகளிலும் என்.சி.சி. திட்டம்.

434—(*வினா எண் 12431) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் என்.சி.சி.யைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவர் அவர்களே, நாட்டைப் பாதுகாக்க, வலிமை மிக்க, கடமையுணர்வு, ஒழுங்கு, கட்டுப்பாடு மிக்க வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக் கும் வகையில் இராணுவப் பயிற்சி, விமானப்படைப் பயிற்சி

கடற் படைப் பயிற்சி போன்றவற்றை என்.சி.சி. மூலமாக அனைத்துப் பள்ளிகளிலும், அனைத்து மாணவ மாணவிகளுக்கும் கட்டாயப்படுத்திட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா அல்லது மாநில அரசு பொறுப்பில் உள்ள சாரண இயக்கத்தில் இராணுவப் பயிற்சிகளை வழங்கும் வகையில் விஸ்தரிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாரணர் பயிற்சியினையும், என்.சி.சி. யினையும் கட்டாயப்படுத்தவேண்டும் என்ற நோக்கம் மைய அரசிடமும் இல்லை, மாநில அரசிடமும் இல்லை. விருப்ப அடிப்படையில் ஏற்பாகத்தான் அதைச் செய்து இருக்கிறார்கள். தற்போது தமிழகத்திலே 624 பள்ளிகளிலே தேசிய மாணவர் படையைச் சார்ந்த பயிற்சி நடைபெறுகிறது. மத்திய அரசினுடைய உதவி கணிசமாக அதற்குக் கிடைத்து வருகிறது. அதை மேலும் 365 பள்ளிகளுக்கு நீட்டிக்கவேண்டும் என்று மைய அரசைக் கேட்டு இருக்கிறோம். மைய அரசினுடைய தாக்கீதை எதிர்பார்க்கிறோம். கிடைத்தவுடன் 365 பள்ளிகளுக்கு நீட்டிக்கப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் என்.சி.சி. பயிற்சியைத் தமிழ் மொழியிலேயே அளிக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்க மைய அரசு இசைவு தெரிவித்து அந்த அடிப்படையில் அது நடந்து வருகிறது.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் இந்த 'டீன் ஏஜ்' என்று சொல்லப்படுகிற வயதில் உள்ள மாணவர்களுடைய நடத்தைகளில் காயங்கள் ஏற்பட்டு அவர்கள் வாழ்க்கைச் சீரழிவதைப் பார்க்கிறோம். அதைப் போக்குகின்ற வகையில் பள்ளிக் கல்வி முடிந்தவுடன்—இப்போது சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளில் எல்லாம் மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்தவுடன் இரண்டு

TRUTH ALONE TRIUMPHS

ஆண்டுகள் கட்டாய ராணுவக் கல்வி இருக்கிறது அப்படி ஒரு கல்வியை உருவாக்க மைய, மாநில அரசுகள் முயற்சிக்குமா? அப்படி முயற்சித்தால், உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்பு அற்று இந்த நேரம் இருக்கிற நிலையில் இந்தியாவிற்கு அது உகந்ததாக இருக்கும். ஆகவே இந்தக் கல்விக் கொள்கையில் ஒரு மாறுதலைக் கொண்டு வர மாநில அரசும், மைய அரசும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியிலே ஒழுக்க உணர்வை ஊட்டுவதற்கு உறுதுணையாக இருக்கின்றமுகத்தான், அனைத்து மாநிலங்களிலும் குறைந்தபட்ச கட்டாயத்தை—சாரணப் பயிற்சியாக இருந்தாலும், என்.சி.சி. என்ற அளவாக இருந்தாலும் சரி, பள்ளிப் படிப்பின்போதே ஒரு கட்டாயத்தைக் கொண்டு வரலாமா என்று மனித வளத்துறை ஆய்ந்து வருகிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி. மற்றும் சாரணச் பயிற்சி தருவதைவிட, எப்படி ராணுவத்திற்கு ஆள் எடுக்கிறார்களோ, அதுமாதிரி நல்ல உயரம், பாடி உள்ளவர்களை என்.சி.சி.யில் எடுப்பதற்கும், மேலும் அவர்கள் நாளைய ராணுவ வீரர்களாக ஆகிட, ஒரு திறமை இருக்கிற அளவில் அவர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நோக்கோடு அந்தப் பயிற்சி தற்போது நடைமுறையிலே இருந்து வருகிறது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே பல பள்ளிகளிலே, பயிற்சி பெற்ற என்.சி.சி. ஆசிரியர்கள் வேறு பள்ளிகளுக்கு மாறுதல் செய்யப்படுவதன் காரணமாக, என்சி.சி. யுனிட்டுகளை டிஸ்பேன்ட் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே

[1987 ஏப்ரல் 21]

பின்.சி.சி. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுகிற நேரத்தில்கூட, அதே பள்ளியிலே பணியாற்றுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நல்ல ஆலோசனை. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

திண்டிவனம்-கிடங்கல் ஏரியை மராமத்து செய்தல்.

*435—(*வினா எண் 6662)* **திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் அவசியம் ஏற்படும்போது அவ்வப்போது உள்ள நிதி நிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் வறட்சிப் பணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழக ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வஃப் மூலம் பண உதவி.

*436—(*வினா எண் 9099)* **டாக்டர் த. முகம்மது சலீம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வக்ஃப் Wakf மூலம் பணம் உதவி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?